அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு

# SWOAD

Social Welfare Organization Ampara District

# சுனாமிக்கான மீள் புனரமைப்பின் ஓராண்டு நிறைவில்



உள்ளடக்கம்...


- முகவுரை
- அறிமுகம்
- அமைப்பின் கட்டமைப்பு ரீதியான மாற்றம்
- செயற்பாட்டுப் பிரதேசம்
- தகவல் திரட்டல்
- வலைப்பின்னல் நடவடிக்கை
- புனர்நிர்மாண நடவடிக்கை
- நீண்டகால அபிவிருத்தித் திட்டம்
- சுனாமி புகட்டிய பாடம்
- பணியாளர் பயிற்சி
- சுனாமிக்கான உதவித்திட்டத்தில் இணைந்துகொண்ட நிறுவனங்கள்
- நன்றி நவிலல்



வெளியீடு:
SWOAD தகவல் பிரிவு
சாகாமம் வீதி,
அக்கரைப்பற்று 07,
இலங்கை.

நிதி உதவி:
VSO / NFPO - Strength Project

## தலைமை அலுவலகம்

தொடர்பாளர் –


க.பிரேமலதன் – நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்
தொலைபேசி – 067 2277276, 067 2278358, 067 2277475
தொலைநகல் – 067 2279310
மின்னஞ்சல் – swoad@sltnet.lk
விலாசம் – சாகாமம் வீதி, அக்கரைப்பற்று – 07


## பிரதேச காரியாலயங்களும், விலாசங்களும்

### பொத்துவில்
தொடர்பாளர்
க. கிறேஸ்பிரபா (பிரதேச நிர்வாக உத்தியோகத்தர்),
தொடர்பிலக்கம் – 063 2248443
முகவரி – பிரதான வீதி, பொத்துவில்


### திருக்கோவில்
தொடர்பாளர்
பொ. புஸ்பராணி (பிரதேச நிருவாக உத்தியோகத்தர்),
தொடர்பிலக்கம் – 067 2265182
முகவரி – கலைமகள் வித்தியாலய வீதி, தம்பிலுவில்

### காரைதீவு
தொடர்பாளர்
சி. தங்கராணி (பிரதேச நிருவாக உத்தியோகத்தர்),
தொடர்பிலக்கம் – 067 5622595
முகவரி – பிரதான வீதி, காரைதீவு – 10

### கல்முனை
தொடர்பாளர்
க. சந்திரமலர் (பிரதேச நிருவாக உத்தியோகத்தர்),
தொடர்பிலக்கம் – 067 2223738
முகவரி – நம்பியார் வீதி, நற்பிட்டிமுனை, கல்முனை

### சம்மாந்துறை
தொடர்பாளர்
த. பவானி (பிரதேச நிருவாக உத்தியோகத்தர்),
தொடர்பிலக்கம் – 067 5672596
முகவரி – வளிப்பாட்டுப் பிள்ளையார் கோவில் வீதி, வீரமுனை

### நாவிதன்வெளி
தொடர்பாளர்
த. கௌரீஸ்வரி (பிரதேச நிருவாக உத்தியோகத்தர்),
தொடர்பிலக்கம் – 077 6157284
முகவரி – 15ம் கொளனி, நாவிதன்வெளி



## முகவுரை.

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பானது (SWOAD) கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக பொருளாதாரம், கல்வி, புனர்நிர்மானம், சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் அபிவிருத்தி, சுற்றாடல் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி எனப் பல துறைகளில் பணிகளை மேற்கொண்டு வந்தமை யாவரும் அறிந்த விடயம்.

இந்நிலையில் நாட்டில் எதிர்பாராத வகையில் இடம்பெற்ற சுனாமி பேரலைத் தாக்கத்தினால் எமது சமூகம் மீண்டும் சொத்து, உடமைகள், உயிர்களை இழந்த நிலையில் பாரிய நெருக்கடிக்குள் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் தள்ளப்பட்டிருந்தனர்.

இதன் அடிப்படையில் சுவாட் அமைப்பானது சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தமது பணிகளை ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவேதான் சுவாட் அமைப்பானது நிவாரணப்பணிகள், மீள் புனரமைப்புப் பணிகள், கட்டிட நிர்மான வேலைத்திட்டங்கள், ஆற்றுப்படுத்தல் வேலைத்திட்டங்கள், வீதி அபிவிருத்திப் பணிகள், சுகாதாரப் பணிகள் என பல துறைகளில் தற்போது தமது சேவைகளை செய்து கொண்டு வருகின்றது.

எனவேதான் சுனாமி பேரலைத் தாக்கம் இடம் பெற்று 1வருட பூர்த்தியை முன்னிட்டு சுவாட் அமைப்பான்து மேற்கொண்ட பணிகளை சமூகத்திற்கு வெளிப்படுத்தும் நோக்கில் இம்மலர் அமைப்பின் தகவல் பிரிவினால் வெளியிடப்படுகின்றது.

– நன்றி –

கோபாலகிருஷ்ணன் சுகிர்தினி
தகவல் உத்தியோகத்தர்

*"இச்செய்தி மடல் ஐரோப்பிய கூட்டமைப்பினால் நிதி வழங்கப்பட்ட ஸ்ரெங் திட்டத்தின் ஆதரவில் வெளியிடப்படுகின்றது"*

*"This News letter was made possible by the support of the European Union funded project **STRENGHTS**"*

## அறிமுகம்.

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பானது இம்மாவட்டத்தில் வாழ்கின்ற பாதிக்கப்பட்டு, நலிவுற்ற மக்களின் வாழ்வில் புத்தொளியூட்டும் நோக்குடன் 1995ல் ஸ்தாபிக்கப்பட்டது.

1990 களிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட வன்செயலினாலும், வறுமையினாலும் பல துறைகளிலும் மக்கள் பெருமளவில் பின்னடைந்திருந்தனர். தாக்கமுற்று சோர்வுற்ற இம்மக்களின் வாழ்வை வளம்படுத்தவும் அவர்கள் வாழ்விற்கு புத்தொளிர்வூட்டப்பட வேண்டுமென்ற தேவைப்பாடே இவ்வமைப்பு உதயமாவதற்கு அடிநாதமாக விளங்கிற்று.

மக்களை அணிதிரட்டி மக்களின் ஊடாகவே பல்வேறு திட்டங்களை செயற்படுத்துவதுடன் அவற்றை மக்களின் பங்களிப்புடனே ''தாங்குதிறன்'' கொண்டதாக செயற்படுத்துதே எமது தெளிவான நிலைப்பாடாகும்.

கடந்த இரண்டு தசாப்த கால யுத்தத்தின் விளைவாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்கிய பாதிப்புக்களைக் கவனத்தில் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சேவையாற்ற ஓர் அரசசார்பற்ற அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கிலே சமூக நல்வாழ்வு அமைப்பு ஒன்றை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வமைப்பை ஆரம்பிப்பதற்கு அயராது உழைத்த ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராஜா அவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும் முக்கிய சமூக ஆர்வலர்களை அழைத்து பல கலந்துரையாடல்களை நடாத்தி வந்தார். இதன் விளைவாக 1995ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு தோற்றம் பெற்றது.

கொடிய யுத்தத்தின் விளைவாகவும் , வறுமையின் காரணமாகவும் அம்பாறை மாவட்டத்திலே 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ்கின்ற தமிழ் , முஸ்லிம், சிங்கள மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளிலிருந்து இவர்ளை விடுவிப்பதற்கான திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் யுத்தம் தீண்டிய, இடப்பெயர்வை ஏற்கனவே எதிர்நோக்கிய மக்களை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சுனாமிப் பேரலை தாக்கி திட்டமிடப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் முடக்கி இரு வேறு தேவைக்குட்பட்ட, வித்தியாசமான படிப்பினைகளை உள்ளடக்கிய மக்கள் சமூகத்துக்கான வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்த வேண்டிய நிலைக்கு நிறுவனம் தள்ளப்பட்டது.


அரச நிர்வாகம் இயக்கம் அனேகமாக தேக்கமடைந்திருந்த வேளை தனி மனிதர்களும், மக்கள் குழுக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அனர்த்தம் ஏற்பட்ட ஒருசில மணித்தியாலங்களுக்குள் உயிர் தப்பியவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் அளிப்பது மீட்புப் பணிகளை ஒழுங்கு படுத்துவது , கழிவுகளை அகற்றுவது உயிர் தப்பியோரை தேடுவது, இறந்தவர்களை கண்டுபிடித்து நல்லடக்கம் செய்வது போன்ற ஏராளமான பணிகளில் ஈடுபட்டிருந்ததோடு மட்டும் நின்றுவிடாமல் உடனடியான உணவு, நீர், உடை, சுகாதாரப் பொருட்கள் போன்ற பொருட்களை பகிர்ந்தளித்த முறையினையும், அவரது சேவையினையும் இரக்கத்தினையும் பாராட்டுதல் அவசியம்.

## அமைப்பின் கட்டமைப்பு ரீதியான மாற்றம்

சுனாமிக்கான புனரமைப்புச் செயற்பாடுகளை ஒழுங்கு படுத்தலில் அனுபவம் பெற்ற பணியாளர்களின் தொடர்பும் பங்களிப்பும் கூட மிக முக்கியகாரணியாகத் தோன்றிய கால கட்டத்தில் பணியாளர்கள் அமைப்பின் நோக்கத்திற்கு அமைவான வழமையான செயற்றிட்டத்துடன் சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளையும் வழங்க வேண்டியிருந்தது. அமைப்பின் கொள்திறனையும், சேவையின் தரத்தையும் நிலைத்திருக்கச் செய்யும் பொருட்டு கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்பட்டு சேவைகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்சொன்ன அடிப்படையில் வழமையான சேவைகளை முன்னெடுப்பதற்கு ஒரு பிரிவும், சுனாமி தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கான சேவையினை வழங்க ஒரு பிரிவும் செயற்பட்டது.

## சுனாமிச் செயற்பாட்டுப் பிரதேசம்.

1. பொத்துவில்
2. திருக்கோவில்
3. காரைதீவு
4. கல்முனை
5. அக்கரைப்பற்று
6. அட்டாளைச்சேனை.



## தகவல் சேகரித்தல்.

சுனாமிப் பாதிப்பு இடம் பெற்று நாட்கள் நகர்ந்து கொண்டிருந்த வேளையிலும் பாதிப்பின் உடனடியான உண்மைத் தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையில் தகவல் சேகரித்து படிவங்கள் தயாரிக்கப்பட்டு தொண்டர்கள், களப்பணியாளர்கள், கிராமசேவகர், பிரதேச செயலாளர்கள் மூலமும் தகவல் பெற்றுக் கொண்டதோடு நலன்புரி நிலையங்களில் தொண்டர்கள் நாளாந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பயன் பெறுனர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்களின் பங்களிப்புடனும், பிரிவு ரீதியான அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் சகல சேவைகளும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

பிரதேச ரீதியாக நியமிக்கப்பட்டிருந்த தொண்டர்கள் மூலமாக உடனடி உண்மைத் தகவல்கள் பெறப்பட்டு **Fax, E-mail** மூலம் அரச திணைக்களங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், நன்கொடையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதோடு **SWOAD** ஒரு தகவல் மையமாகச் செயற்பட்டமையும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாகும்.

## வலைப்பின்னல் நடவடிக்கை.

சுனாமிப் பாதிப்பு இடம்பெற்று ஏராளமான நிறுவனங்கள் உதவிசெய்வதற்கென வந்தபோதிலும் அவர்களுடனான எந்தவித இணைந்த தொடர்பும் இருக்கவில்லை. அவ்வேளையில் முதன்முதலாக அனைத்து சர்வதேச, உள்ளூர் நிறுவனங்களையும் இணைத்து இணைப்புக் கூட்டம் ஒன்றினை நடாத்திய பெருமை சுவாட் அமைப்பினையும், இணைப்பாளர் திரு. ச.செந்துராஜா அவர்களினையுமே சாரும்.

கொள்திறனை அடிப்படையாகக் கொண்டு சேவையாற்ற வந்த நிறுவனங்களை உள்ளிணைத்து அதற்கான ஏற்பாடுகளை செய்து ஏனைய அமைப்புக்களினூடாக மக்களுக்குச் சேவையினைப் பெற்றுக் கொடுத்தது.

பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல நிறுவனங்கள் சேவை செய்ய முன்வந்த போதிலும், அவர்களுக்கான இடவசதி இல்லாதிருந்த கட்டத்தில் காரியாலயங்களுக்கான இடவசதியினை ஏற்படுத்தி நாம் வழங்கினோம்.

### நிவாரணப் பணிகள்.

உடனடி நிவாரணப் பணிகளுக்கு உணவுப் பொருட்களான அரிசி, பால்மா, பருப்பு, குழந்தை களுக்கான பால்மா, மருந்துப் பொருட்கள் அமைப்பின் நிதியிலிருந்து கொள்வனவு செய்து விநியோகிக்கப்பட்ட போதும் ஒருவார காலத்தினுள் பல்வேறு நிறுவனங்களும், தொண்டர் அமைப்புக்களும், நலன் விரும்பிகளும் ஏனைய பொருட்களையும் வழங்குவதில் இணைந்து கொண்டமை வரவேற்கத்தக்க விடயமாக இருந்தது. ஆலையடிவேம்புப் பிரதேச மக்களிடமிருந்து சமைத்த உணவுப் பொதிகள் ஒரு வாரத்திற்கு சேகரித்து வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதனையடுத்து **Oxfam, SCiSL., VSO** போன்ற நிறுவனங்கள் உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு முன்வந்தது.

## புனர்நிர்மானப் பணிகள்.

### 1. மனவள ஆற்றுப்படுத்தல்.

பயங்கர அனுபவங்களையும், பாரிய இழப்புக்களையும் சந்தித்திருந்த வளர்ந்தோர், சிறுவர்களது மனவடுக்களை ஆற்றுப்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்குத் திணிக்கப்பட்ட நிலையில் மக்கள் மத்தியிலும் தமது அனுபவங்களை பகிர்வதில் உளரீதியில் பிரயோசனம் மிக்கதென்ற கருத்து பரவலாகக் காணப்பட்டது.

எமது பணியாளர்களுக்கூடாக ஓரிரு நாட்களில் பயிற்றுவிக்கப்பட்ட தொண்டர்களையும் ஏற்கனவே பயிற்றப்பட்ட பணியாளர்களினையும் இணைத்துப் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர், பாதிக்கப்பட்டோர் இனங்காணப்பட்டு, மனவடுவை நீக்குவதற்கான சேவை முன்னெடுக்கப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு இலங்கை அமைப்பானது இச் செயற்பாட்டில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவு எமக்கு உதவியது.

**உ) குடிநீரும், சுகாதாரமும்.**

சுகாதார ஒழுங்கமைப்புக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளும், வைத்திய உபகரணங்களும் பாதிப்படைந்த நிலையில் சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், போன்றவர்களது தேவைக்கு குறைவான முன்னுரிமைப்படுத்தல்கள் ஆரம்பத்தில் காணப்பட்டாலும் பின்னர் அவர்கள் மீதான கவனம் அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் முன்னுரிமைப்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

- சுனாமிப் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு தங்கவைக்கப்பட்ட போதும் குடிநீர்ச் சுத்தமும், சுகாதாரமும் பேணப்படவில்லை. இக்கால கட்டத்தில் சுவாட் அமைப்புடன் **Oxfam** நிறுவனம் இணைந்து இப்பணியில் பெருந் தொண்டாற்றியது என்றால் மிகையாகாது.
- சுத்தமான குடிநீர், சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வுகள் அமைப்பின் பணியாளர்களினூடாகச் செய்யப்பட்டது.
- குடிநீர்ப்போத்தல்கள் நிறுவனங்கள், நலன்விரும்பிகளினால் சுவாட் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டது.
- சுகாதார சேவைகளை ஆற்றுவதற்கென வந்த தாய்லாந்து வைத்திய அமைப்பினர்களுக்கான இலகு படுத்துனர்களை வழங்கியதோடு, அவர்களுக்கான தங்குமிட வசதியினையும் ஏற்படுத்திக் கொடுத்தோம்.
- சுகாதார மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு Oxfam நிறுவனத்தின் நிதியுதவியுடன் மண்டானை நலன்புரி நிலையத்தில் 48 தற்காலிக மல கூடங்களும் பின்னர் 150 நிரந்தர மலகூடங்களும் **SWOAD** அமைப்பினால் அமுலாக்கம் செய்யத்திட்டமிடப்பட்டதனை யடுத்து தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்ட இடங்களிலேயே முன்னுரிமை அடிப்படையில் இம்மலகூடங்கள் அமைக்கப்பட்டது.
- சுவாட் அமைப்பின் ஊடாகச் செயற்படுத்தப்பட்ட Oxfam சுகாதார மேம்பாட்டுச் செயற்பாட்டிற்கு சுவாட் 30 தொண்டர்களை வழங்கினோம்.
- நீர்த்தாங்கிகளை USAID, Helpage, Oxfam நிறுவனங்களிடமிருந்து பெற்று வழங்கியதோடு குடிநீர் விநியோகத்திற்கான பொறுப்பினையும் Oxfam நிறுவனத்துடன் இணைந்து ஆறுமாத காலத்திற்குச் செயற்படுத்தினோம்.
- Unicef நிறுவனத்தின் நிதியுதவியுடன் 200 மலகூடங்கள் அமைக்கத் தீர்மானிக்கப் பட்டதற்கிணங்க மலகூடங்கள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

**3) கொடுப்பனவுடனான சுத்தப்படுத்தல் வேலைத்திட்டம்.**

சுனாமிப்பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட மக்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்தது மட்டுமன்றி நிவாரணப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பணத்தட்டுப்பாட்டினை எதிர்நோக்கியதோடு, தேவைக்கு அதிகமாக வழங்கப்பட்ட பொருட்களை விற்றுப்பணம் பெற்றுக்கொண்டனர். இந்நிலையில் Christain Aid,Japan Embassy, SCiSL நிறுவனங்கள் காசுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் மக்கள் குடியிருப்புகள், வீதிகள், பொது இடங்கள் என்பன துப்பரவு செய்யப்பட்டதோடு மக்களின் சிறு தேவையினைப்பூர்த்தி செய்வதற்கு பணமும் கிடைத்தது. இவ் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான மண்வெட்டி, நீர் இறைக்கும் பம்பிகள், Generator மின் பிறப்பாக்கிகள் ஏனைய துப்பரவு செய்வதற்கான பெருமளவிலான உபகரணத் தொகுதியினை வழங்கிய பெருமை USAID நிறுவனத்தினையே சாரும்.

4) தற்காலிக வீடமைப்பு.

இருபது நிமிடங்களில் கோரமாகத் தாக்கிய பேரலையானது நகரங்களையும், கிராமங்களையும், இல்லாமல் செய்தது மட்டுமல்லாமல் மக்களை இல்லமற்ற அனாதைகளாகவும் மாற்றியுள்ளது.

இந்நிலையில் மீள்புனரமைப்புச் செயற்றிட்டத்தின் கீழ் தற்காலிக கூடாரங்கள் UNHCR, நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்டதனையடுத்து தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான திட்டம Oxfam நிறுவனத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டது.

Oxfam நிறுவனத்தின் தற்காலிக வீடமைப்புத் திட்டத்தின் கீழ் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 9 கிராமசேவகர் பிரிவுகளில் 3 மாதகால இலக்கினை அடிப்படையாகக் கொண்டு 273 இலட்சம் ரூபா செலவில் 500 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டதோடு மேலதிகமாக 10 வீடுகள் சுவாட் அமைப்பினால் அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

UNHCR நிறுவனத்தின் நிதியுதவியுடனும் சுவாட் அமைப்பின் வழிகாட்டலுடன் உள்ளூர் நிறுவனங்களான Sewdio vision,Seedo first, Feed, SWOAD இணைந்து அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில், அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் தற்காலிக வீடைமைப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது.

## நீண்டகால அபிவிருத்தித் திட்டம்.

1) ஜீவனோபாயத்திட்டம்.

பாதிக்கப்பட்ட மக்களை தொழில் ரீதியாக ஊக்கப்படுத்தி வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு Oxfam நிறுவனத்தின் நிதியுதவியுடன் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 11 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 1568 பயனாளிகளுக்கு 410 இலட்சம் ரூபா செலவில் 15 விதமான தொழிலினை மேற்கொள்வதற்கான தொழிலுபகரணங்களாகவும், தொழில் ஆரம்பிப்பதற்கான முதலாகவும் சுவாட் அமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ளது. அதில் 5000 – 30000 ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது. இதில் 15000/- ரூபாவுக்கு உட்பட்ட தொகை மானியமாகவும் மேலதிக தொகை கடன் அடிப்படையிலும் வழங்கப்பட்டது.

DCA , NDTF, SCiSL, Diakonia, Helpage, UNDP போன்ற நிறுவனங்களும் தொழில் மீள ஆரம்பிப்பதற்கான நன்கொடைகளையும், குறைந்த வட்டியுடனான கடனுதவித் திட்டத்தினையும் வழங்கியுள்ளது.

DCA நிறுவனமானது தொழிலுக்கான போக்குவரத்து வசதியினைக் கருத்தில் கொண்டு 300 பைசிக்கிள்களையும், இழந்த ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் ஆவணங்கள் பெற்றுக்கொடுத்துள்ளதோடு சமையலறைத்தளபாடங்கள் 300 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Direct Aid Sri Lanka நிறுவமானது சுனாமிப் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு தொழிலுக்கான போக்குவரத்து வசதியையும் இழந்தவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் 201 பைசிக்கிள்களை வழங்கியுள்ளது.

2) நிரந்தர வீடமைப்பு.

Christain Aid நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் 50 நிரந்தர வீடுகள் 325 லட்சம் ரூபா செலவில் கல்முனை, காரைதீவுப் பிரதேசங்களில் அமைக்கத் திட்டமிடப்பட்டதன்படி முதற்கட்டமாக 20 வீடுகள் இவ்வாண்டில் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் தறுவாயிலுள்ளது.

3) சிறுவர் கல்வியும், அபிவிருத்தியும.

பாதிபுக்குள்ளாக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்தினையும் மனநிலை மாற்றத்தினையும் கருத்தில் கொண்டு பாலர் பாடசாலைகள் அமைப்பதற்கும், தளபாடங்கள் வழங்குவதற்கும WUSC, SCiSL, Consortium , GVC , Sivasarity ஆகிய நிறுவனங்கள் உதவியுள்ளது.


## சுனாமிப் பாதிப்புகள்


















## வலைப்பின்னல் நடவடிக்கை

















## நிவாரண நடவடிக்கைகள்





## மன ஆற்றுப்படுத்தல்





## பாதை புனரமைப்பு





## குடிநீரும் சுகாதாரமும்







## தற்காலிக வீடமைப்பு












## ஜீவனோபாயத்திட்டம்





**3.1) சிறுவர் கழகம்.**

சிறுவர் பாதுகாப்பு இலங்கை அமைப்பானது (SCiSL) சிறுவர் கழகங்களினது செயற்பாட்டு முன்னேற்றத்திற்கான விளையாட்டு, கற்கை உபகரணங்களை பொத்துவில், காரைதீவு, கல்முனை, திருக்கோவில் பிரதேசங்களிலுள்ள சிறுவர்களுக்கு வழங்கியுள்ளது.

**3.2) பாலர் பாடசாலை.**

1) சிவசாரிட்டி (Sivacharity) நிறுவனமானது தலா 40 இலட்சம் ரூபா செலவில் 5 முன் பாடசாலைகளை அமைத்துத் தந்துள்ளதோடு ஆசிரியர்களுக்கான 1500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவினையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2) சிறுவர் பாதுகாப்பு இலங்கை அமைப்பானது (SCiSL) திருக்கோவில், காரைதீவு பிரதேசங்களில் 210,000 ரூபா செலவில் தற்காலிக பாலர் பாடசாலைகளை அமைப்பதற்கான நிதியுதவியினை வழங்கியுள்ளது.

3) GVC அமைப்பினால் கல்முனைப் பிரதேசத்தில் பாலர் பாடசாலை 2 அமைக்கப்பட்டுள்ளது.

4) உலக கனேடிய பல்கலைக்கழக (WUSC) நிறுவனமானது தலா 22 லட்சம் ரூபா செலவில் 8 பாலர் பாடசாலைகளை அமைத்துள்ளது.

5) CIDA - Fit நிறுவனம் நலன்புரி நிலையங்களிலுள்ள சிறுவர்களின் மனநிலை மாற்றத்தினைக் கருத்தில் கொண்டு தேநீர் நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தியதோடு, பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை சீருடைத்துணி, கற்கை உபகரணங்களடங்கிய பொதிகள் 600 வழங்கியது.

அத்தோடு சுனாமி பற்றிய விழிப்புணர்வினை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் பொருட்டு களப் பணியாளர்கள் 10 பேருக்கு சுனாமி பற்றிய விழிப்புணர்வுப் பயிற்ச்சியினையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**4) முதியோர் உதவித்திட்டம்.**

Helpage நிறுவனமானது முதியோருக்கான உதவித்திட்டத்தினை அமைப்பினூடாக செயற்படுத்திக் கொண்டு வருகின்றது சுனாமிப் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட முதியோரின் வாழ்க்கையில் புத்தொழியூட்டும் நோக்கில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. முதற்கட்டமாக சிறுகைத்தொழில்களை மேற்கொள்பவர்களுக்கு தொழில் மேம்பாட்டுகான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, வைத்திய உதவிகளும் வழங்கப்பட்டுக்கொண்டு வருகின்றன. எதிர்காலத்தில் அவர்களது அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் கிணறு, மலசூடம், வீடு என்பனவும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**5) தொழில் வழங்குனரும், தொழிற்பயிற்சியும்.**

தொழிற்பயிற்சி வழங்கலில் உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனம் (WUSC) அளப்பரிய சேவையினை ஆற்றிக்கொண்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயம்.அந்தவகையில் மோட்டார் பைசிக்கிள் திருத்துதல், மின்னிணைப்பு, தச்சுவேலை, ஆகிய பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

சுனாமிக்கான மீள்புனரமைப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது கூலியாட்களுக்கான தட்டுப்பாடு நிலவிய காலகட்டத்தில் அதனை நிவர்த்தி செய்வதற்காக குறுகிய கால பயிற்சி நெறிகளை நடாத்திக் கொண்டு வருவதோடு பயிற்ச்சிக்கான கட்டடத்தினையும் அமைத்துத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொழிற்பயிற்சி மாத்திரமன்றி சுனாமியால் பாதிகப்பட்ட பயிற்சியாளர்களுக்கான நிவாரண உதவித் திட்டங்களையும் செய்துள்ளது.

ILO அமைப்பானது சாரதி பயிற்சியினை 18 வயதுடைய 10 பேருக்கு வழங்கியுள்ளது.

***பணியாளர்கள ஒத்துழைப்பும், வழங்கப்பட்ட உதவித்திட்டங்களும்.***

அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனைப் பிரதேசங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டதோடு எமது பணியாளர்களும் உயிர், உடமைகளை இழந்து பாதிக்கப்பட்டிருந்தனர். இருந்தும் சேவையின் தேவை உணர்ந்து பணியாளர்கள் இணைந்து கொண்டமை அனைத்துப் பணியாளர்களின் அர்ப்பணிப்பினையும் சேவைமனப்பாங்கினையும் வெளிக்காட்டக் கூடியதாக இருந்தது.

அதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான அரச உத்தியோகத்தர்கள், மக்களின் தூற்றுதலுக்கும், விமர்சனத்திற்கும் எமது பணியாளர்கள் ஆளாக்கப்படவும் தவறவில்லை.

பாதிக்கப்பட்ட பணியாள்களக்கு நிறுவனம் சார்பாக பணஉதவிகள் வழங்கப்பட்டதோடு CHA , WUSC போன்ற அமைப்பினால் பணவுதவிகளும், தையல் இயந்திரங்கள், பைசிக்கிள்கள் என்பன்வும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***சுனாமி புகட்டிய பாடம்.***

- ❖ நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பும், பாதிப்பின் விபரங்களும், தேவைகள் பற்றிய விபரமும் தகவல்களின் பரிமாற்றமும் அவசியம்.
- ❖ பாதிப்பின் தன்மையினைக் கருத்தில் கொள்ளாது மக்களின் தேவையினைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.
- ❖ நிவாரணப் பணிகளில் சமூகக் கலாசார விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
- ❖ நிவாரண, மீள்புனரமைப்புப் பணிகளில் விசேட தேவைக்குட்பட்டோருக்கான (சிறுவர், பெண்கள், கற்பிணித்தாய்மார், முதியோர்) தேவைகளுக்கு முக்கிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
- ❖ பாதிப்பின் பின்னர் வழங்கப்பட்ட வளங்கள் பயன்படுத்தப்பட்ட முறையினை மறைமுகமாகக் கண்காணித்தல் வேண்டும்.
- ❖ தேவைகள் உள்ளூர் சமூகங்களுடனான கலந்தாலோசனையின் அடிப்படையில் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- ❖ நீண்டகாலப் புனர்வாழ்வுத் திட்டமிடலினைச் செய்யும் போது அரச கொள்கைகள் பற்றியும், உதவித்திட்டங்கள், பொது வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் பற்றியும் விழிப்புணர்வூட்டப்படல் வேண்டும்.
- ❖ சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வளங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலப் பணிகளைத் திட்டமிடல் வேண்டும்.
- ❖ அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அறிவினை பணியாளர்கள் பெற்றுக் கொண்டுள்ளதோடு, முன்னாயத்தப் பயிற்சிகளையும், அறிவினையும் வழங்க வேண்டிய தேவையினையும் உணர்ந்து கொண்டுள்ளோம்.

***பணியாளர் பயிற்சி.***

பாதிப்பின் பின்னர் பாரியளவான மீள்புனரமைப்பு வேலைத்திட்டத்தினைச் செயற்படுத்தவும், வேலையின் தரத்தினைப் பேணவும் அனுபவமிக்க பணியாளர்கள் குறைவாகவேகாணப்பட்டனர் இந்நிலையில் புதிய பணியாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு அவர்களுக்கான பயிற்சியினை

வழங்கவும் நிறுவனம் தவறவில்லை. பயிற்சி வழங்கக் கூடிய நிலையிலிருந்த முகாமைத்துவப் பணியாளர்களும், பயிற்சித் தலைப்புக்களும் இணைப்பாளர் தலைமையில் இனங்காணப்பட்டு பயிற்சிகள் மாலை வேளையில் தொடங்கி இரவு வரை நடாத்தப்பட்டதோடு ஏனைய நிறுவனங்களினாலும் பயிற்சிகள் நடாத்தப்பட்டமையும் குறிப்பிடப்பட்டது.

***பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்.***

- அனர்த்த முகாமைத்துவம்.
- தலைமைத்துவம்
- தொடர்பாடல்
- உளவள ஆற்றுப்படுத்தல்.
- சமூக வலுவூட்டல்
- பால்நிலை சமத்துவமும், அபிவிருத்தியும்
- கண்காணிப்பும் மதிப்பீடும்
- தகவல் முகாமைத்துவம்
- சிறுவர் அபிவிருத்தி
- சிறுவருக்கான உளவளப் பயிற்சி
- நீர் முகாமைத்துவம்
- சிறுவர் பராமரிப்பு
- பாலியல் தொடர்பான தொற்று நோய்கள்.
- திறன் விருத்தி
- அறிக்கை எழுதுதல்
- முதியோர் மேம்பாடு
- திட்ட அபிவிருத்தி

***எதிர்நோக்கிய சவால்கள்.***

- பாதிக்கப்படாத மக்களும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் போட்டியாக இருந்தமை.
- நிறுவனங்களிடையே இரட்டிப்புத் தன்மையில்லாமல் வேலையினைக் கொண்டு செல்வதில் கஸ்டங்களை எதிர் நோக்கியமை.
- மக்கள் பங்களிப்பினைப் பெறுவதில் கடினம்.
- உதவித்திட்டத்திற்கான மூலப் பொருள் கொள்வனவில் சிரமங்களையும், சவால்களையும் எதிர்நோக்கியமை.
- சுனாமிக்குப் பின் புதிய நிறுவனங்களின் ஊடுருவலால் வினைத்திறன் மிக்க பணியாளர்களை தேடுதல் சவாலாக அமைந்தமை.
- வீட்டு வாடகையும், கூலியாட்களுக்கான சம்பளமும் அதிகரித்தமை.

நிவாரணப் பணிகளில் இணைந்து கொண்ட நிறுவனங்கள், அமைப்புக்கள்.

## FUNDING PARTNERS OF SWOAD - 2005

| YEAR DONOR | AMOUNT | PURPOSE | Reason |
|---|---|---|---|
| 2005 CA | 2,750,000.00 | Clearing work | Tsunami |
| CA | 32,542,000.00 | Permanent Shelter | Tsunami |
| CHA | 290,000.00 | Tunami Affected Staff | Tsunami |
| CHA | 1,307,580.00 | Sewing Machine & Bicycle | Tsunami |
| CONSORTIUM | 200,000.00 | Tsunami Affected Division | Tsunami |
| CONSORTIUM | 95,322.00 | NFRI Item | Tsunami |
| CONSORTIUM | 110,000.00 | Pre School Constraction | Tsunami |
| DCA | 13,498,000.00 | Livelihood | Tsunami |
| DIAKONIA | 3,599,630.00 | I D Support | |
| DIAKONIA | 5,112,525.00 | Livelihood | Tsunami |
| FIT | 100,870.00 | Children Development | Tsunami |
| GOAL | 528,087.00 | Sewing & Weaving | Tsunami |
| GOAL | 167,700.00 | Vegetable cultivation | Tsunami |
| GOAL | 112,970.00 | Livelihood | Tsunami |
| GOAL | 100,800.00 | Poultry farm for Youth | Tsunami |
| HELPAGE | 1,537,925.00 | Livelihood | |
| JAPAN EMBASSY | 8,176,102.50 | Clearing work-Cash for Work Tsunami | |
| NDTF | 2,387,000.00 | Micro Credit | |
| NECCDEP | 30,000.00 | Training Programme | |
| OXFAM | 40,934,900.00 | Livelihood | Tsunami |
| OXFAM | 29,639,925.00 | Temporary Shelter | Tsunami |
| OXFAM | 4,689,413.00 | Sanitation | Tsunami |
| SCISL | 152,850.00 | PSYCHO Social Programe | Tsunami |
| SCISL | 1,434,900.00 | Cash for work -Clearing | Tsunami |
| SCISL | 832,175.00 | Pre School Constraction | Tsunami |
| SCISL | 8,807,200.00 | Livelihood | Tsunami |
| UNDP | 2,392,840.00 | Livelihood | Tsunami |
| UNHCR | 40,920,750.00 | Temporary Shelter | Tsunami |
| UNICEF | 1,312,500.00 | Children Development | Tsunami |
| Unicef | 15,352,400.00 | Sanitation | Tsunami |
| WUSC | 62,000.00 | Relife to Tsunami Affected | Tsunami |
| WUSC | 550,000.00 | Building Constraction - Motorcycle Repairing | |
| WUSC | 2,200,000.00 | Pre School Constraction | Tsunami |
| WUSC | 953,700.00 | Electrical Wiring | |
| WUSC | 501,451.50 | Motor Cycle Repairing | |
| WUSC | 843,730.00 | Carpentry | |
| Total | 242,016,606.00 | | |

# நன்றிகள் பல....

2004.12.26ம் திகதி எதிர்பாராத விதமாக நாட்டில் ஏற்பட்ட பாரிய சுனாமி பேரலைத் தாக்கத்தினால் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உயிர்கள், சொத்துக்கள், உடமைகள் ஆகியவற்றை இழந்து அநாதைகளாக தஞ்சமடைந்து உண்ண உணவின்றி, உடுக்க உடுப்பின்றி, இருக்க இருப்பிடமின்றி அகதி முகாம்களில் தஞ்சமடைந்த இம்மக்களின் வாழ்விற்கு புத்துயிர் அளிக்கும் நோக்குடன் பல உதவிகள் வழங்கிவருகின்ற வெளிநாட்டு, உள்ளூர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், பணியாளர்களுக்கும் இந்நிறுவனங்களுக்கு பொருள்களையும், பண உதவிகளையும் வாரி வழங்கிய வெளிநாட்டு, உள்நாட்டு மக்களுக்கும் இவ்வேளையில் எமது மக்கள் சார்பிலும் எமது நிறுவனத்தின் சார்பிலும் நன்றி அறிதலை அறியத்தருகின்றோம்.

மேலும் மழை, வெயில், நேரம் பாராது சுனாமி பேரலைத் தாக்கத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கு பல வழிகளில் சேவைகளை ஆற்ற முன்வந்த எமது அமைப்பின் சகல மட்ட பணியாளர்களுக்கும், நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினருக்கும் ஏனைய உள்ளூர் பிரமுகர்கள் அனைவருக்கும் எமது அமைப்பின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

***எமது பணி இத்துடன் நின்றுவிடாது பாதிப்புற்ற மக்களின் நீண்ட கால நல்வாழ்வுக்காக சேவைவழங்கிட முன்வருவீர்கள் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.***

\- நன்றி -










முதியோர் உதவித்திட்டம்








சிறுவர் கழகங்களும், பாலர் பாடசாலையும்








தொழிற் பயிற்சிகள்
















# SWOAD

## Social Welfare Organization Ampara District

SAGAMAM ROAD,
AKKARAIPATTU - 07,
SRI LANKA.
Phone 067 2277276, 067 2278358, 067 2277475
Fax:067 2279310
e-mail: swoad@sltnet.lk

"எல்லோர்க்கும் நல்வாழ்வு"

"Better Life For All"

printed by-
new selection printers
067 2278855

designed
niram
+94 773052317